பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

மெட்ரோபாலிடன் அலுவலகம், சினாட் செக்ரடேரியட், செயின்ட் தாமஸ் கம்யுனிடி, திருவல்லா, கேரளா, இந்தியா.

மேய்ப்பனின் கடிதம்

மார்ச்/ஏப்ரல் 2023

அனைத்து ஆர்ச் பேராயர்கள், பிஷப்கள், குருமார்கள் மற்றும் டீக்கன் குருக்கள், இவாஞ்சிலிஸ்ட் மற்றும் கருணை சகோதரிகள் உலகெங்கிலும் உள்ள நம் விசுவாச மக்கள் யாவருக்கும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஆசீர்வாதங்களும் வாழ்த்துக்களும் உண்டாவதாக. ஆமென்!

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் உங்களுக்கு கிருபையும், இரக்கமும், சமாதானமும் உண்டாவதாக .+

சிலுவையில் அவருடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நோக்கி இயேசு கிறிஸ்துவோடு பிரயாணிக்கும் நாமக்கு இந்த பெரிய தவக்காலம் பரிசுத்த திருச்சபையின் ஒரு முக்கியமான காலமாகும்

இயேசுகிறிஸ்துவின் சிலுவையில் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் வரை நாம் பயணிக்கும் புனித திருச்சபையின் மிக முக்கியமான காலம், இந்த பெரிய தவக்காலம் ஆகும்.

ஏப்ரல் 3 ஆம் தேதி தொடங்கி 9 ஆம் தேதி ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடையும் 'புனித வாரம்' என்று அழைக்கப்படும் தவக்காலத்தின் கடைசிப் பகுதிக்கு இப்போது நாம் வந்துள்ளோம், இந்த காலங்களில் நீங்கள் ஆவிக்குரிய ரீதியில், ஜெபம், உபவாசம், மற்றும் நம்மை சுற்றி உள்ளவர்களுக்கு நாமாக முன்வந்து கிறிஸ்துவை பிரதிபலிக்கிற இந்த எல்லா விஷயங்களிலும் பலப்படுத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

இப்போது நாம் விரைவில் புனித வாரத்தில் நுழைய இருக் கிறோம், பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் திருச்சபையின் விசுவாச மக்கள் யாவரும் செய்ய வேண்டிய சில விஷயங்களை நான் பரிந்துரைக்கிறேன்.

முதலாவது: உங்கள் உள்ளூர் திருச்சபையில் புனித வார ஆராதனை நடவடிக்கைகள் ஒரு பகுதியாக இருப்பதற்கான செயலை மேற்கொள்ளுங்கள். ஈஸ்டர் ஞாயிறு அன்று நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை திருவிருந்து ஆராதனையில் பங்கேற்று, 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்' என்று இருதயத்தில் சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டாடுவோம்

இரண்டாவது: உள்ளான ஆரோக்கியத்தையும் மறுவாழ்வையும் கொடுக்க வல்ல கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கையின் செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள உங்களை அர்ப்பணிக்கவும், 1 கொரிந்தியர் 15 ஆம் அதிகாரம் 3 - 4 வசனத்தில் பார்க்கும்போது அப்போஸ்தலனாகிய பவுலும் ஆதித்திருச்சபைப் பிதாக்களும் அறிவித்த செய்தி இதுவே "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளிலே உயிர்த்தெழுந்து," உங்கள் சமுதாயத்தில் நோய்வாய்ப்பட்டவர்களுக்காக ஜெபிப்பதற்கும், கவனிப்பதற்கும் நேரத்தை ஒதுக்குவதின் மூலம் நீங்கள் ஒவ்வொரு நாளும் இதைச் செய்யலாம்; மேலும் உங்கள் வார்த்தைகளிலும் செயலிலும் கருணையும், மனதுருக்கமும் கொண்டிருப்பதன் மூலம், துக்கத்திலும் விரக்தியிலும் இருப்பவர்களுக்கு ஆறுதல் அளிப்பது, ஏழைகள் மற்றும் எளியவர்களை கவனித்துக்கொள்வது போன்றவற்றை செய்யலாம்.

மூன்றாவது: உங்கள் குடும்பத்திலோ, அக்கம்பக்கத்திலோ அல்லது வேலை செய்யும் இடத்திலோ வாழ்க்கையில் கடினமான நெருக்கடிகளைச் சந்திக்கும் நபர்களைக் கண்டால், மற்றும் சிறப்பு பிரார்த்தனைகள் தேவைப்பட்டால், அவர்களை ஒரு நாள் திருச்சபைக்கு வரும்படி அழைக்கலாம், அங்கு உங்கள் குருவானவர் ஜெபிதின்மூலம், நம்பிக்கை மற்றும் மறுசீரமைப்பைக் கண்டறிய அவர்களுக்கு உதவலாம். விசுவாசிகளாகிய நீங்களும் உங்கள் குருவானவருடன் சேர்ந்து தேவனுடைய வாக்குதத்தங்களில் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் ஜெபிக்கலாம்.

நானகாவது: பரிசுத்த திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் தொடர்ந்து சேவை செய்ய கர்த்தர் நமது திருச்சபைகளிலிருந்து அதிகமான இளைஞர்களையும் பெண்களையும் எழுப்ப வேண்டும் என்று ஜெபிக்க ஒவ்வொரு நாளும் நேரத்தை ஒதுக்குங்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த மத்தேயு அதிகாரம் 9 வசனங்கள் 37 - 38 இல் வாசிக்கும்போது ஜெபிக்கும்படி கட்டளையிட்டார், தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.

ஒவ்வொரு நாளும் உங்கள் பிள்ளைகள் தேவனின் அழைப்பைப் பெற்று அவருக்கு சேவை செய்வதை அவர்கள் வாழ்க்கையில் மிகவும் விரும்பத்தக்கதாகத் தேர்ந்தெடுக்க நீங்கள் ஜெபிப்பேன் என்று தனிப்பட்ட முடிவை எடுங்கள்,

ஐந்தாவது: இறுதியாக கிறிஸ்துவில் உள்ள என் அன்பான சகோதர சகோதரிகளே, நமது நம்பிக்கையின் அஸ்தி பாரமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தான், இது இந்த உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட

வாழ்வின் நம்பிக்கையை அளிப்பதின் மூலம், வாழ்க்கையின் கடினமான கேள்விக்கான பதிலை கொடுக்கிறது. அவர் ஜீவிப்பதால், நாளை நாம் தைரியம் மற்றும், தீரத்துடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள முடியும். ஏனெனில் நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள் என்று பரிசுத்த யோவான் 14:19ல் கூறுவது போல் வாழ்வோம். எனவே, ஒவ்வொரு நாளும் நம்பிக்கையுடனும் நேர்மறை மனப்பான்மையுடனும் ஜீவனம் பண்ணுங்கள். உங்கள் ஆவிக்குரிய தந்தையாக, இந்தப் பயணத்தில் நான் உங்களுடன் கூடவே இருக்கிறேன், உங்களுக்காக தினமும் ஜெபம் செய்கிறேன்.

நித்திய ஒளியில் வாழ்வதற்கு உயிர்த்தெழுந்த கர்த்தரின் கிருபையிலும் இரக்கத்திலும் ஒவ்வொரு நாளும் பலப்படுவோமாக!

பரிசுத்த திருச்சபையின் சேவையில்,

கிறிஸ்துவில் உங்கள் ஆவிக்குரிய தந்தை,

அத்தெனேஷியஸ் யோஹான் I மெட்ரோபொலிட்டன்.